


# வணக்கம்

# தொடக்கநிலை 4 உயர்தமிழ் 2023

# மொழிக்கூறுகள்

குறிப்பாக இரண்டு திறன்களில் கூடுதல் கவனம்

- படித்தல்
  - கருத்துரை திறன்
  - சொல்வளப் பெருக்கம்

- எழுதுதல்
  - எழுத்துத் திறனில் மேம்பாடு
  - பொருத்தமான மொழிப் பயன்பாடு

# வழங்கப்பட்டுள்ள வளங்கள்

- பாடநூல் (ஆண்டு முழுமைக்கும் ஒரே பாடநூல்தான்)
- மாணவர் கற்றல் தள நடவடிக்கைகள்



# கற்றல் நடவடிக்கைகள்

| | |
|---|---|
| கலந்துரையாடுதல் | பல்வேறு நடவடிக்கைகள்வழிப் பாடத்தை அறிமுகம் செய்து கலந்துரையாடச் செய்தல் |
| படித்துக் கருத்துணர்தல் | பல்வேறு செய்திகளை, குறிப்பாக இலக்கியச் செய்திகளை, எளிமையான படித்தல் பகுதியாக அறிமுகம் செய்தல் |
| சொல்வளப் பெருக்கம் | பகுதியில் உள்ள இனிய சொற்களையும் தொடர்களையும் அறிமுகம் செய்தல் |
| மொழிப் பயன்பாடு | சொல் உருவாக்குதல், வாக்கியம் அமைத்தல் முதலிய நடவடிக்கைகள்மூலம் மொழியைச் சரியாகப் பயன்படுத்தக் கற்பித்தல் |
| எழுதுதல்/எழுத்துவழிக் கருத்துகளைப் பரிமாறுதல் | பல்வேறு புத்தாக்கமிக்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் |

பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு

- கலந்துரையாடுவோம்
- சிந்திப்போம்;கலந்துரையாடுவோம்
- பேசுவோம்
- சுவைத் தகவல்
- உங்களுக்குத் தெரியுமா?
- விளையாடுவோம்
- பாத்திரமேற்று நடிப்போம்



# படித்துக் கருத்துணர்தல்



- படிப்போம்
  - ✓ பொருள் விளக்கம்
  - ✓ சுவைத் தகவல்
  - ✓ உங்களுக்குத் தெரியுமா?
  - ✓ விடை காண்போம்






இலக்கியக் கதை

வேற்று நாட்டுக் கதை

# உங்களுக்குத் தெரியுமா? /சுவைத் தகவல்

## உங்களுக்குத் தெரியுமா?



முற்காலத்தில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் மட்டுமே போர்க்கலையில் சிறந்தவராக விளங்க வேண்டும் என்ற கருத்து வழக்கில் இருந்தது. எனவே, அரச குடும்பத்தின் குரு மிகச் சிறந்த போர்க்கலைகளைப் பிறருக்குக் கற்றுத்தர மாட்டார். அதனால்தான், குருவாகிய துரோணர் ஏகலைவனுக்கு வில்வித்தையைக் கற்றுக்கொடுக்கவில்லை.

## உங்களுக்குத் தெரியுமா?

தேசியக் கொடியை வீடுகளுக்கு வெளியே பறக்கவிடும் வழக் 1965-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆண்டுதோறும் ஜூலை 1முதல் செப்டம்பர் 30வரை மட்டுமே நமது தேசியக் கொடியை இல்லங்களுக்கு வெளியில் பறக்கவிடுவது வழக்கம்.

ஆனால், 2020-ஆம் ஆண்டில் கொடியை இல்லங்களுக்கு வெளியில் பறக்கவிடுவதற்கான கால அளவு நீட்டிக்கப்பட்டது. ஏப்ரல் 25-ஆம் தேதி முதலே சிங்கப்பூரர்கள் தேசியக் கொடியைத் தங்களது இல்லங்களுக்கு வெளியில் பறக்கவிட அனுமதி வழங்கப்பட்டது. 'கொவிட்-19' கிருமித்தொற்றுச் சூழ்நிலையில் சிங்கப்பூரர்கள் தங்களுடைய ஒருமைப்பாட்டைக் காட்டுவதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்தது.





## சுவைத் தகவல்

பிற இனத்தவரின் கலைகளில் ஆர்வம் காட்டும் கலைஞர்கள்.

டான் குவோ மிங்*, டான் குவோ ஜூன்* இருவரும் சகோதரர்கள். இவர்கள் இந்திய பாரம்பரிய இசையில் அதிக ஆர்வம் உள்ளவர்கள். டான் குவோ மிங், சித்தார் வாசிப்பதில் வல்லவர். டான் குவோ ஜூன் தபேலா வாசிப்பதில் வல்லவர். இந்த இசைக்கருவிகளை வாசிப்பதால் தமக்குச் சுயக் கட்டுப்பாடு அதிகரித்துள்ளது என்று குவோ மிங் குறிப்பிட்டுள்ளார்.

முகமது ஷஃபிக் இஸ்காண்டார்* 'எர்ஹூ'* என்று அழைக்கப்படும் சீனப் பாரம்பரிய இசைக்கருவியை வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். இதனால், சீன மொழியைக் கற்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. அம்மொழியைக் கற்றுக்கொண்டதால் சீன இனத்தவரின் பண்பாட்டைப்பற்றி அவர் மேலும் அறிந்துகொண்டதாகக் கூறுகிறார்.




திருவாட்டி மரியா டி சூஸா* தொடக்கத்தில் சீனமொழியை இரண்டாம் மொழியாகப் படித்தார். பின்னர், மலாய்மொழியைப் படிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனாலும் சீனமொழியின்மீதும் சீனப் பண்பாட்டின்மீதும் அவருக்கு அதிக ஆர்வம் இருந்தது. அதனால், சீன எழுத்தோவியத்தில் தமது கவனத்தைச் செலுத்தினார். அக்கலை தமக்கு மனத்தளவில் அமைதியைத் தருகிறது என்று அவர் கூறுகிறார்.

*டான் குவோ மிங் - Tan Guo Ming
*டான் குவோ ஜூன் - Tan Guo Jun
*முகமது ஷஃபிக் இஸ்காண்டார் - Mohammed Shafiq Iskandar
*எர்ஹூ - Erhu
*மரியா டி சூஸா - Maria D'Souza

# சொல்வளப் பெருக்கம் ~ மொழிப் பயன்பாடு



பயிற்சி 2.2 தேதி: ____

**வகைப்படுத்துவோம்**

கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களைப் படித்து அவற்றை வகைப்படுத்து.

(எ-டு)
மயில்
காகம்
புறா — பறவைகள்

1 சிங்கம்
மான்
யானை — ____

2 ரோஜா
அல்லி
மல்லிகை — ____

3 திங்கள்
புதன்
ஞாயிறு — ____

4 ஆப்பிள்
மாம்பழம்
பப்பாளி — ____

5 தை
மார்கழி
சித்திரை — ____

6 வெண்டைக்காய்
தக்காளி
முள்ளங்கி — ____

7 அன்பு
கருணை
பொறுமை — ____

பயிற்சி 4.2 தேதி: ____

**வாக்கியம் அமைப்போம்**

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைப் பார். ஒவ்வொரு சொல்லும் ஒரு பண்பைக் குறிக்கிறது. ஒவ்வொரு சொல்லைக்கொண்டும் ஒரு வாக்கியம் அமை.

(எ-டு)

மதிப்பு
நாம் பிற இனத்தவரின் பழக்கவழக்கங்களுக்கு மதிப்பு அளிப்பது முக்கியம்.

பணிவுடன்

விட்டுக்கொடுத்து

பயிற்சி 9.2 தேதி: ____

**தொடர் உருவாக்குவோம்**

'பள்ளி' என்ற சொல்லுடன் இணைத்து எழுதக்கூடிய சொற்களைக் கண்டுபிடி. பின், கீழே கொடுக்கப்பட்டிருக்கும் இடங்களில் அச்சொற்களை எழுது.

எ-டு : பள்ளிக்கூடம்

பள்ளி____

பள்ளி____

பள்ளி____

பள்ளி____

# எழுதுவோம்

எழுதுதல், எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம் ஆகிய திறன்களை வளர்க்கக்கூடிய பல்வேறு பயிற்சிகள்






# மாணவர் கற்றல் தளத்தில் பயிற்சிகள்



# தொடக்கநிலை நான்கு உயர்தமிழ் மதிப்பீடு

Higher Tamil Language
Assessment Mode – Non-weighted

Higher Tamil Language students’ learning progress will be monitored through non-weighted formative assessments throughout the year.




பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவு
கல்வி அமைச்சு